# சீர்காழியில் நடைபயிற்சி மேற்கொண்டபோது பொதுமக்களிடம் வாக்குசேகரித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!





சீர்காழியில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (7.4.2026) அங்கு நடைபயிற்சி மேற்கொண்டபோது, அங்குள்ள பொதுமக்களை சந்தித்து சீர்காழி தொகுதி வேட்பாளர் ஆர்.செந்தில் செல்வன் அவர்களுக்கு வாக்கு சேகரித்தார். உடன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும் பூம்புகார் தொகுதி வேட்பாளருமான நிவேதா எம். முருகன் உள்ளார்.

# சிவகங்கை மாவட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - ஆர்.தமிழரசி - கருணாஸ் - எஸ்.மாங்குடி வேட்பு மனு தாக்கல்!

சிவகங்கை. ஏப்.8–


தமிழகத்தில் வருகிற 23ம்தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 234 சட்டமன்ற தொகுதியிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இதில் சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர், சிவகங்கை, காரைக்குடி, மானா மதுரை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகள் உள்ளது . சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மாவட்ட கழக செயலாளர் கூட்டு றவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் ஐந்தாவது முறையாக தனது வேட்புமனுவை தேர்தல் அலுவலர் சிவபாலனிடம் தாக்கல் செய்தார். மாற்று வேட்பாளராக அவரது மனைவி திருமதி பிரேமா பெரிய கருப்பன் செய்தார். இவருடன் மாநில கழக செய்தி தொடர்பு துணைத்தலைவர் மருது அழகுராஜ், காங்கிரஸ் பன்னீர், தனசேகர் தே.மு.தி.க. வழக்கறிஞர்கள் எஸ்.பாஸ்கரன், முத்துராமலிங்கம் ஆகியோர் சென்றார்கள்.

2.மானாமதுரை மானாமதுரையில் இரண்டாவது முறையாக போட்டியிடும் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் மானாமரை வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார் மாற்று வேட்பாளராக ரவிக்குமார் வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

3. சிவகங்கை. சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் முக்குலத்தோர் புலிப்படை சார்பில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் நடிகர் கருணாஸ் தனது வேட்புமனுவை சிவகங்கை கோட்டாட்சியர் செல்வி ஜெபியா கிரேஸிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார் .

4. காரைக்குடி சட்டமன்ற தொகுதியில்இரண்டாவது முறையாக போட்டியிடும் வேட்பாளர் எஸ். மாங்குடி தனது வேட்புமனுவை தேவகோட்டை சார்ஆட்சியர் ஆயுஷ் வெங்கட்டிடம் தாக்கல் செய்தார். நான்கு மாவட்டங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வேட்பாளர்களை கூட்டணி கட்சியினர் மாலை,சால்வை அணிவித்து வாழ்த்து கூறினார்கள் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், வழக்கறிஞர். அ. கணேசன் முன்னாள் எம்.எல்.ஏ க்கள் சுப.மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, மருத்துவர் கோகுலகிருஷ்ணன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, பி.டி.ஆர். முத்து,ந.அம்பல முத்து.


மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் தோழர் திருமதி ஹேமலதா செந்தில், முன்னாள் அமைச்சர் ஒன்றிய செயலாளர்கள் எஸ். சண்முகவடிவேல் விராமதி மாணிக்கம், பி.செல்வராஜ், பூமணி, கே பாலசுப்பிரமணியன், குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், நாகனிரவி, வழக்கறிஞர் வே.பூபால சிங்கம், அமைச்சர் பெரிய கருப்பன் திருப்பத்தூரில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



அரியலூர் சட்டப் பேரவைத் தொகுதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் லதாபாலு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கருடன் தேர்தல் நடத்தும் அலுவலர் த.பிரேமியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.உடன் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் அங்கனூர் சிவா, தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் இராம.ஜெயவேல் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர் .



பல்லடம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். உடன் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், வேப்பனஹல்லியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் கழகத்தின் சார்பாக போட்டியிடும் மாநில இளைஞரணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் தனது வேட்புமனுவை சூளகிரியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் மாவட்டச் செயலாளர் பிரகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் முருகேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கழக வெற்றி வேட்பாளராக போட்டியிடும் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் வை.முத்துராஜா தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் துணை மேயர் எம்.லியாகத் அலி, எஸ்.எஸ். கருப்பையா, மு.க.ராமகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் மதியழகனை ஆதரித்து திரைப்பட நடிகரும், திமுக நட்சத்திர பேச்சாளருமான போஸ் வெங்கட் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். அப்போது பர்கூர் தொகுதியில் உள்ள அச்சமங்கலம், கெட்டூர், ஐகுந்தம், சீனிவாசபுரம் உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் அவர் பரப்புரை மேற்கொண்டு கழக அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துரைத்தார் கூட்டங்களில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மத்திய ஒன்றியச் செயலாளர் காந்தி உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினர் கலந்து கொண்டனர் .



சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் ஆத்தூர் , கெங்கவல்லி, ஏற்காடு , வீரபாண்டி ஆகிய சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.